பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 07 2026** **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இந்தோனேஷியா பயணத்தை முடித்துக்கொண்டு மூன்று நாள் பயணமாக ஆஸ்திரேலியா புறப்பட்டு சென்றுள்ளார்.

2. குவைத் உடனான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. விமான நிலையங்களில் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடுவுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

4. சண்டை நிறுத்தம் தொடர்பாக ஈரானுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. விம்பிள்டன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arnav Vijay Paparkar** காலிறுதிக்கு முன்னேறி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இந்தோனேஷியா பயணத்தை முடித்துக்கொண்டு மூன்று நாள் பயணமாக ஆஸ்திரேலியா புறப்பட்டு சென்றுள்ளார்.

மெல்போர்ன் விமான நிலையத்தில் ஆஸ்திரேலிய பிரதமர் திரு **Anthony Albanese** அவரை வரவேற்க உள்ளார்.

இந்தியா — ஆஸ்திரேலியா ஆண்டு உச்சிமாநாட்டில் இரு தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

விரைவாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகள் பட்டியலில் உள்ள இந்தியா, ஆஸ்திரேலியாவின் பொருளாதார நட்பு நாடாகவும் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா புறப்படும் முன் வெளியிட்ட அறிக்கையில், வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய பிரதமர் திரு **Anthony Albanese** வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துமழைப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை அவருடன் இணைந்து மேற்கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய பசிபிக் மண்டலத்தில் அமைதி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குபிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் திரு நரேந்திர மோடியிடம் பேச இருப்பதாகவும், ஆஸ்திரேலிய பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

குவைத் இளவரசர் திரு **Sheikh Sabah Al Khaled**-ஐ, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேசியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடி, குவைத் இளவரசருக்கு வாழ்த்து கூறியதை அவரிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா — குவைத் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு திரு **Sheikh Sabah Al Khaled** மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

வளைகுடா மண்டலத்தில் அமைதி மற்றும் மேம்பாட்டுக்காகவும், இந்தியாவுக்கு அளித்துவரும் ஆதரவுக்காகவும் தமது நன்றியை தெரிவித்ததாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டில் உள்ள முக்கிய விமான நிலையங்களில் பாதுகாப்பு மற்றும் குடியுரிமை கண்காணிப்பை வலுப்படுத்துவது குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, இன்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடுவுடன் ஆலோசனை நடத்தினார்.

கண்காணிப்பை வலுப்படுத்த தானியங்கி எக்ஸ்-ரே கண்காணிப்பு அமைப்பை முக்கிய விமான நிலையங்களில் படிப்படியாக பொருத்துவது குறித்தும் திரு அமித் ஷா புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

இந்த கருவிகளை அமைப்பதால் குடியுரிமை அதிகாரிகளின் பணிச்சுமை குறையும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் 21 விமான நிலையங்களில் பாதுகாப்பு கட்டமைப்பையும், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருவதாக கூறிய அவர், மேலும் 41 விமான நிலையங்களில்

முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்தும் பணிகள் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

அனைத்து விமான நிலையங்களிலும் பயணியர் போக்குவரத்துக்கு ஏற்ப அதிக அளவில் உயர்மட்டப் பாலங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை விமான போக்குவரத்து அமைச்சகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பயணிகளின் உடமைகளை வெளியில் கொண்டுவருவதற்கான கட்டமைப்புகள் 16 விமான நிலையங்களில் உள்ளதாகவும், அனைத்து சர்வதேச விமான நிலையங்களிலும் இதனை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்

அனைத்து மாநில தலைநகரங்களில் மண்டல வாரியான வெளிநாட்டவர் பதிவு அலுவலகங்கள் 2047-ஆம் ஆண்டுக்குள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அகர்தலா மற்றும் Jewar விமான நிலையங்களில் அதிகாரப்பூர்வ குடியுரிமை கண்காணிப்பு அதிகாரிகளை விரைவில் நியமிக்கவேண்டும் என்றும் திரு அமித் ஷா, விமான போக்குவரத்து அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

பிரிக்ஸ் நாடுகளின் தர நிர்ணய அமைப்பு தலைவர்கள் கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளை மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று ஆய்வு செய்தார்.

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இந்திய தர நிர்ணயக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

இக்கூட்டத்தின் முக்கியத்துவம் குறித்து தமது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள திரு பிரல்ஹாத் ஜோஷி, பிரிக்ஸ் நாடுகளின் தர நிர்ணய அமைப்புகளுக்கு இடையே நிலையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளவும், சர்வதேச அளவிலான மாநாட்டை திட்டமிடவும் இக்கூட்டம் வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே தர நிர்ணயம் தொடர்பாக ஒன்றிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட உள்ளதாக திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஈரான் — அமெரிக்க போர் சூழல் காரணமாக வளைகுடா நாடுகளில் **CBSE 12**-ஆம் வகுப்பு தேர்வு எழுத இயலாத மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்ட மாற்று முறை மதிப்பெண் வழங்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

வளைகுடா நாடுகளிலிருந்து இதுதொடர்பாக மாணவர்கள் தாக்கல் செய்துள்ள மனுக்கள் மீது பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கும், மத்திய பள்ளிக்கல்வி வாரியம் சிபிஎஸ்இ -க்கும் நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் திரு கே வி விஸ்வநாதன், திரு **Alok Aradhe** கொண்ட அமர்வு உத்தரவிட்டது.

வளைகுடா நாடுகளில் உள்ள தனித்தேர்வர்களுக்கு கடந்த மாதம் **21**-ஆம் தேதி வழங்கப்பட்ட உத்தரவு குறித்தும் விளக்கம் அளிக்குமாறும் உச்சநீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை இம்மாதம் **14**-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

சண்டை நிறுத்தம் தொடர்பாக ஈரானுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

துருக்கி தலைநகர் அன்காராவில் நடைபெற்ற நேட்டோ உச்சிமாநாட்டுக்குப்பின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதை தெரிவித்த திரு ட்ரம்ப், ஈரானுடன் இதுதொடர்பாக மேற்கொண்டு எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்த அமெரிக்கா விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

நேட்டோ உச்சிமாநாட்டின்போது **Hormuz** நீரிணை பகுதியில் அமெரிக்காவும், ஈரானும் தாக்குதலில் ஈடுபட்டன.

இதனால் மூன்று டேங்கர் கப்பல்கள் பாதிக்கப்பட்டன.

இதற்கு ஈரான் நேரடியாக பொறுப்பேற்கவில்லை.

சண்டையை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில், இருநாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட **60** நாள் சண்டை நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில், கத்தாரில் நடைபெற்ற ராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான மறைமுக பேச்சுவார்த்தையிலும் முடிவு ஏதும் எட்டப்படவில்லை.

<<<<<<>>>>>>

யுக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்ய படைகள் நேற்றிரவு நடத்திய தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். **20**-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ரஷ்ய விமானப்படையினர் **169** ட்ரோன்கள் மற்றும் ஏழு ஏவுகணைகளை கொண்டு இந்த தாக்குதலை நடத்தியதாக யுக்ரைன் விமானப்படையினர் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், கீவ் நகரில் போருக்கான ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

விம்பிள்டன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arnav Vijay Paparkar** காலிறுதிக்கு முன்னேறி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-1** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Ryo Tavata** -வை வென்றார்.

----------------

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Hitesh** மற்றும் **Ganga** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Hitesh** — சீன தைபே-யின் **Jun Zhanglin** -ஐ வென்றார்.

ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் **Ganga** — மங்கோலியாவின் **Amgalanbaatar Bulgankhuu** -வை வென்றார்.

இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Ambekar Meetei, Aditya, Sikander, Devendra Choudhary** ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

------------

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் **Ishan Kishan** முதலிடத்திலும், அபிஷேக் சர்மா இரண்டாவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

---------------------

இந்தியா — அமெரிக்கா இடையேயான ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டி இன்று இங்கிலாந்தில் நடைபெற உள்ளது.

---------------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா மகளிர் குழு பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஸ்பெயினின் **Madrid-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின், அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா — கொரியாவை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் இந்தியாவின் **Ganesh Maniratnam Thirumuru, Kushal Dalal,** ரிஷப் யாதவ் ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவுகளில் **Chikita Taniparthi, Jyothi Surekha, Prithika Pradeep** ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

இணைய வாயிலாக நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி பட்டம் வென்றார்.

**11-**ஆவது சுற்று முடிவில் ஒன்பதரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

**<<<<<<END>>>>>>**